


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை கொண்டாட்ட விழாவில் தடகள வீராங்கனை வெ.பவித்ரா, தடகள வீரர் ஜா.கோகுல் பாண்டியன், ரோலர் ஸ்கேட்டிங் வீராங்கனை ஜ.கார்த்திகா, பாரா தடகள விளையாட்டு பயிற்றுநர் கோ.விஜய சாரதி, பாரா தடகள வீராங்கனை வெ.முத்துமீனா ஆகியோருடன், அவர்களின் வெற்றிச் சாதனைகள் குறித்து கலந்துரையாடினார்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 54 ஆ வட்டம், அண்ணா பிள்ளை தெருவில் உள்ள திருவள்ளுவர் மன்றம் அருகில் PKG மகளிர் சுய உதவிக் குழுத் தலைவரும், வட்டக் கழக துணைச் செயலாளர் ஆன தனுஜா பானு குமாரி தலைமையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு 200 மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி, மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, வட்டக் கழக செயலாளர் பா.கதிரவன் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### ஐந்தாண்டு கால கழக ஆட்சியில்

# 4192 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்திருக்கிறது!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

**சென்னை, பிப்.20-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் 4192 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு இந்த 5 ஆண்டு ஆட்சியில் நடத்தி இருக்கிறோம் என்று அமைச்சர் பி.கே.சேகர் பாபு பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.**



இதுபற்றிய விவரம் வருமாறு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (18.02.2026) வினா விடை நேரத்தின்போது, அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் சி.மகேந்திரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், ஸ்ரீவில்லி புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் இ.எம்.மான்ராஜ், நன்னிலம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.காமராஜ் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**சி.மகேந்திரன் :** மடத்துக்குளம் தொகுதி, சோழமாதேவி அருள்மிகு குங்கும வள்ளியம்மன் உடனுறை குலசேகரசாமி திருக்கோயிலுக்கு தரைத்தளம் அமைத்து, சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கின்ற அருள்மிகு குங்குமவள்ளி குலசேகரசாமி திருக்கோயிலுக்கு 24 லட்சம் ரூபாய் செலவில் ஏற்கனவே தரைத்தளம் அமைக்கின்ற பணி நடைபெற்று கொண்டிருக்கின்றது. 25 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணியானது தரைதளம் அமைக்கும் பணி நிறைவுற்ற பிறகு தான் மேற்கொள்ளப்படும். தரைதளம் அமைக்கின்ற பணி 50 சதவிதம் முடிவுற்று இருக்கின்றது. அந்த பணி நிறைவுற்றபின், சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணி தொடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி.மகேந்திரன்:** அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, மடத்துக்குளம் வட்டம் சோழமாதேவி அருள்மிகு குங்குமவள்ளி குலசேகர சுவாமி திருக்கோயில் பணிகள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்ற நிலையில் தற்போது நிதி பற்றாக்குறை உள்ளதால் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு கூடுதல் நிதி ஒதுக்கி தருமாறு அன்போடு கேட்டுக் கொண்டு, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் வரலாற்று சிறப்புமிக்க மும்மூர்த்திகள் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு புனரமைப்பு பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தவும் மற்றும் திருக்கோயிலில் அன்னதானம் 50 பேருக்கு வழங்கப்படுகிறது அதனை நூறு நபர்களுக்கு வழங்கிட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரியிருந்த அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு 2016 ஆம் ஆண்டு தான் குடமுழுக்கு நடந்திருக்கின்றது. ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்த வேண்டும் என்றாலும் கூட அந்த கோயிலில் சிறு சிறு பகுதிகள் சேதமடைந்து இருப்பதை கணக்கில் கொண்டு திருப்பணிகள் தொடங்குவதற்குண்டான பணிகள் தொடங்கி இருக்கின்றோம். அந்த திருக்கோயிலில் 50 நபர்களுக்கென்று தொடங்கப்பட்ட அன்னதானம் 100 நபர்களுக்கு என்று மாற்றப்பட்டு திருவிழா காலங்களில் 150 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. உங்கள் கோரிக்கையை ஏற்று அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து மார்ச் 1 தமிழகத்தின் இதய நாளிலிருந்து 150 நபர்களுக்கு அன்னதானம் தொடங்கப்படும்.

அன்னதானத் திட்டத்திலே இந்த ஆட்சி மிகப் பெரிய புரட்சியை செய்திருக்கிறது. கடந்த காலங்களில் 2 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் இருந்தது. முதலமைச்சர் அவர்கள் பொற்கால ஆட்சி ஏற்பட்ட பிறகு அதை மேலும் 12 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டு 14 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒருவேளை அன்னதானத் திட்டம் மேலும் 23 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டு 764 திருக்கோயில்களில் ஒரு வேளை அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அன்னதானத் திட்டத்தால் ஆண்டொன்றுக்கு பயன்பெறுகின்ற இறையன்பர்களின் எண்ணிக்கை 3.50 கோடியாகும். இதற்கு ஆகின்ற செலவு ஆண்டிற்கு ரூ. 120 கோடியாகும். திருவிழா காலங்களில் நெல்லையப்பர் திருக்கோயில் உட்பட 27 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. பழனியில் தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரத்திற்கு 20 நாட்கள் 4 இலட்சம் பக்தர்களுக்கும், வடலூரில் தைப்பூசத்தை முன்னிட்டு நாளொன்றுக்கு 10,000 பக்தர்கள் வீதம் 3 நாட்களுக்கு 30,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி, அன்னதானப் பிரபுவாக இந்த ஆட்சியும், முதல்வரும் காட்சியளிக்கின்றார் என்பதை பேரவையின் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி.மகேந்திரன்:** மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மைவாடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உபயதாரர்கள் மற்றும் பொதுமக்கள் மூலமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது நிதி பற்றாகுறையால் பணிகள் தொய்வடைந்துள்ளது. அதற்கு கூடுதல் நிதி ஒதுக்குமாறும், உடுமலைப் பேட்டை, அருள்மிகு பிரசன்ன விநாயகர் கோயில் மிக முக்கியமாக கோயிலாகும். அதற்கு குடமுழுக்கு நடத்தவும், அதேபோல மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட, அருள்மிகு ஆத்தோரம் வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் புனரமைப்பு பணிகளுக்கு தேவையான நிதியினை ஒதுக்கி விரைவில் கும்பாபிஷேகம் செய்து கொடுக்கவும் காரத்தொழுவு அருள்மிகு அழகுநாச்சியம்மன் திருக்கோயில் புகழ்பெற்ற கோயிலாகும். அந்த கோயிலுக்கு வெளிப்புற சுற்றுச்சுவர் கட்டித்தர கூடுதல் நிதியை ஒதுக்கி செய்து கொடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன் வருவாரா என கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், அருள்மிகு அழகுநாச்சியம்மன் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களுக்கும் நிதியை ஒதுக்கி ஏற்கனவே நடைபெற்று வரும் திருப்பணிகளை விரைவுப்படுத்தி விரைவில் குடமுழுக்கு நடைபெறும்.

குடமுழுக்கை பொறுத்தளவில் உறுப்பினர் நடைபெறுமா, நடைபெறுமா என கேள்வி எழுப்பினார். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் நடைபெற்றுள்ள குடமுழுக்குகளின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால் இந்து சமய அறநிலையத்துறை உருவாகிய காலம் என்றாலும், முன்னோர்கள் நமக்கு விட்டு சென்ற பொக்கிஷமான திருக்கோயில்கள் என்றாலும் இந்த ஐந்தாண்டு ஆட்சியில் தான் 4,192 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கை கண்டுயிருக்கின்றோம். அதோடு மட்டுமல்லாமல் இந்த மாதத்தில் மட்டும் கூடுதலாக நடைபெறவுள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை இதுவரையில் நாங்கள் அனுமதி அளித்திருப்பது 130 திருக்கோயில்களாகும். அதையும் சேர்த்து கணக்கிட்டால் இந்த மாத இறுதிக்குள் 4,322 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொண்டு, மக்களோடு இறைவனையும், இறைவியையும் மகிழ்ச்சியோடு வைத்துக் கொண்டிருக்கின்ற ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பதை என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.அம்பேத் குமார்:** வந்தவாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெண்குன்றம் கிராமத்தில் தவளகிரி நாதர் மலைக்கோயில் உள்ளது. அந்த மலைக் கோயிலை சுற்றி வந்தவாசி சுற்று வட்டார மக்கள் மட்டும் அல்ல செய்யாறு தொகுதியை சேர்ந்த கிராம மக்களும் கிரிவலப் பாதையில் செல்கிறார்கள். அந்த கிரிவலப் பாதையில் மின்விளக்குகளும் அதுமட்டுமல்ல அந்த ஜங்ஷன் சந்திப்பு பகுதிகளில் உயர் கோபுர மின் விளக்குகளும் அமைத்து பௌர்ணமி அன்று கிரிவலப் பாதையில் செல்கின்ற மக்களுக்கு ஒரு சிறப்பு அன்னதானமும் வழங்க அறநிலையத்துறை அமைச்சர் கனிவோடு பரிவசித்து அதை செய்து தர முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரிய கிரிவலப் பாதையை உடனடியாக இணை ஆணையாளரை ஆய்வு செய்ய சொல்லி அதற்குண்டான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு சென்று, அடுத்த ஆண்டு இதே நேரத்தில் இதே சட்டப்பேரவையில் 2026 ஆம் ஆண்டு இதே முதல்வர் முன்னிலையில் அந்த கேள்வியை கேட்கின்ற பொழுது அந்த பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதை பேரவையின் தலைவர் வாயிலாக உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ.எம்.மான்ராஜ் :** ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் ஆனது நீண்ட காலமாக தூர்வாரி பராமரிக்கப்படாமல் உள்ளது. அப்பகுதியில் குளிக்கும் பொதுமக்கள் உயிர் இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருக்குளத்தை தூர்வாரி பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரிய தெப்பக்குளமானது மழைக்கால பெருவெள்ளத்தால் நீர்நிலை உயர்ந்த காரணத்தால் நீரை வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது. உடனடியாக திருப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள சட்டமன்ற கூட்டம் முடிந்தவுடன் இணை ஆணையரை கேட்டுக் கொண்டு எவ்வளவு துரிதப்படுத்த முடியுமோ அவ்வளவு துரிதப்படுத்தி நிச்சயம் அவர் கோரிக்கையை நிறைவேற்றி தரப்படும் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.காமராஜ் :** திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அவியநல்லூர் அருள்மிகு சாட்சிநாதர் திருக்கோயிலுக்கு, அதேபோல குடவாசல் அருள்மிகு கோணேஸ்வரர் திருக்கோயிலுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து குடமுழுக்கு விரைவில் முடித்து தருவதற்கு மாண்புமிகு பேரவை தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இரண்டு திருக்கோயில்களின் நிலையை உடனடியாக இணை ஆணையர் அவர்களிடம் அறிந்து, கூடுதல் நிதி தேவைப்பட்டு அதற்குரிய கருத்துரு பெறப்பட்டிருந்தால் உடனடியாக ஆணையர் பொது நல நிதியிலிருந்து நிதி விடுவித்து தரப்படும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர. ஒன்றிய. நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள். அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருவள்ளூர் காக்களூர் பைபாஸ் சாலை அமைந்துள்ள ஆர்.எம்.கெஸ்ட் ஹவுஸில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ். தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கூட்டம் முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றுகிறார் மேலும் இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:- இன்று காணொலி காட்சி வாயிலாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் மாவட்ட கழகச் செயலாளர் கூட்டத்தில் விவாதிக்கும் பொருள் குறித்து

மார்ச் 1 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் விமர்சியாக கொண்டாடுவது குறித்து

2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து

கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

